OS.04/2021
Dated. 10.03.2025
Name : திருமதி. வாசுகி (PW1)
Time: 11.50 AM
<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் தெரிவித்தேன்.

2. பிராதில் 1 முதல் 18 இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1 முதல் 17 இலக்க சொத்துக்கள் எனது தாயாருக்கு கிரையம் மற்றும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. 18ம் இலக்க சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

4. நான் அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். பணிபுரிந்த காலத்தில் திருச்சியில் எனது சொந்த வீட்டில் வசித்து வந்தேன்.

5. 1ம் பிரதிவாதி சென்னையிலும், 2ம் பிரதிவாதி திருச்சியிலும் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6. எனது தகப்பனார் EBல் வேலை செய்து பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் பணி ஓய்வு பெறும் போது JE ஆக பணிபுரிந்தார்.

7. நெடுங்குளத்தில் எங்களுக்கு சொந்தமான ஓட்டு வீடு ஒன்று இருந்தது. 30 வருடங்கள் பழமையானது என்றால் சரிதான். எனது தாயார் 1998ம் ஆண்டு இறந்துவிட்டார். அதற்கு முன்பதாகவே மேற்படி வீடு இடிந்து விழுந்துவிட்டது என்றால் சரிதான். அதன்பின்னர் எனது அப்பா வீரசோழன் கிராமத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான்.

8. நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்னிக்குடி கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் 2004ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை ஆசிரியராக பணிபுரிந்தேன். அந்த காலத்தில் நான் பாரதி நகரில் உள்ள காஜியார்

காம்பிளக்ஸ்ல் உள்ள வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் என்னுடன் தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

9. எனது தகப்பனார் வீரசோழனில் தான் வசித்து வந்தார். எனது தகப்பனார் பணி ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றால் சரிதான்.

10. எனது தகப்பனார் நான் இராமநாதபுரத்தில் பணி செய்து வந்த காலத்தில் என்னுடன் வசித்து வந்தார் என்றும், அவருடைய ஓய்வூதியத்தை என்னிடம் தான் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

11. தாவா 8 ம் இலக்க சொத்தை எனது பெயருக்கு எழுதி கொடுக்க 2005 ம் வருடம் மார்ச் மாதம் கேட்டுக்கொண்டேன் என்றும், அவர் எழுதி தர மறுத்ததால் அவரை இரவு 11.00 மணியளவில் வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டேன் என்றாலும், அதன்பின்னர் எனது வீரசோழனில் வாடகை வீட்டில் வசித்து வந்தார் என்றாலும் சரியல்ல.

12. தாவா 7,8,9 ம் இலக்க சொத்துக்களை எனது தாயார் முனியசாமி என்பவரிடம் கிரைய ஆவண எண். 566/1978 மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

13. மேற்படி கிரைய ஆவணத்தில் சர்வே எண். 55/4– 32 சென்ட் மற்றும் சர்வே எண்.55/6– 73 சென்ட் என்று குறிப்பிட்டு இரண்டு இலக்க சொத்துக்களை தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

14. எனது தகப்பனாருக்கு சொந்த ஊரான நெடுங்குளத்தில் வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை இருந்தது என்றால் சரியல்ல. எனது அப்பாவின் சொந்த ஊரான செங்கப்படையில் வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை இருந்தது.

15. நெடுங்குளத்தில் எனது அப்பாவும், அம்மாவும் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை. எனது பெற்றோர் நெடுங்குளத்தில் இருந்த எங்களுக்கு சொந்தமான ஓட்டு வீட்டில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றும், அந்த வீடு இடிந்த பிறகு தான் எனது தகப்பனார் வீரசோழனில் வாடகை வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

16. 2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நான் எனது சகோதரர்களிடம் பாகம்

கேட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

17. அவர்கள் தர மறுத்ததாக 28.11.2020ம் தேதியன்று நான் மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் எங்கள் இருவரையும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் சரிதான்.

18. பேச்சுவார்த்தையில் ஊர் பெரியவர்களையும், VAO, சர்வேயரையும் வைத்து அளந்து எனக்கு ஒதுக்கும் இடத்தில் வீடு கட்டிக்கொள்ள அறிவுறித்தினார்கள் என்றால் சரியல்ல.

19. சிலிப்பியைச் சேர்ந்த அர்ஜுனன், குழந்தைச்சாமி, நெடுங்குளத்தை சேர்ந்த முத்து, தவமணி, எழுவனூரைச் சேர்ந்த முருகேசன் ஆகியோர் முன்னிலையில் VAO, சர்வேயர் ஆஜராகி கடந்த 07.12.2020ம் தேதியன்று இடத்தை அளந்து பாகம் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

20. கிராம உதவியாளர் முருகன் எனக்கு போன் செய்து அளக்க வரும்படி கூறியதற்கு நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

21. நீதிமன்ற உத்தரவை மீறி வீடு கட்டிக்கொண்டிருந்ததால் நான் மீண்டும் மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் 06.02.2023ம் தேதியன்று புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

22. நான் இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்த மனு கடந்த 05.08.2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.